TNPSC JOB

| **7** - ஆம் வகுப்பு | **இரண்டாம் பருவ நிறைவுத் தொகுத்தறித் தேர்வு - 2025** | |
|---|---|---|
| நேரம்: 2:00 மணி | **தமிழ்** | மதிப்பெண்கள்: 60 |

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4 x 1 = 4**

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் _____
   அ) வீடு ஆ) கல்வி இ) பொருள் ஈ) அணிகலன்
2. காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம்_____
   அ) கல்வி ஆ) காலமறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை
3. பின்வருவனற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர்_____
   அ) எழுது ஆ) படித்தல் இ) நடி ஈ) பாடு
4. போர் இல்லாத உலகில் _______ நிலவும்.
   அ) பதற்றம் ஆ) சாந்தம் இ) வெறுப்பு ஈ) சோர்வு

**ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **2 x 1 = 2**

5. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் _______
6. 'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

**இ. பொருத்துக.** **4 x 1 = 4**

7. இயற்சொல் - பெற்றம்
8. திரிசொல் - இரத்தம்
9. திசைச்சொல் - அழுவம்
10. வடசொல் - சோறு

**ஈ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** **5 x 2 = 10**

11. மலர்கள் எப்போது தரையில் நழுவும்?
12. இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்கியது?
13. ஓவியங்களின் வகைகள் யாவை?
14. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
15. நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?
16. முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
17. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

**உ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4 x 3 = 12**

18. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
19. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
20. மக்கள் குறையில்லாமல் வாழ, தேயிலைத் தோட்டப்பாட்டு கூறும் வழி யாது?
21. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?
22. எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன? சான்று தருக.

**ஊ. பின்வரும் மனப்பாடப் பாடல் பகுதியை அடிப்பிறழாமல் எழுதுக.** **2 + 4 = 6**

23. "தொட்டனைத்து" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
24. "வைப்புழிக்" எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

**எ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** **5 x 2 = 10**

25. பின்வரும் தொடர்களில் பொருத்தமான இடங்களில் 'ஆல்' என்னும் உருபைச் சேர்த்து எழுதுக.

அ) கல்லணை கரிகாலன் கட்டப்பட்டது.

ஆ) அவர் களிமண் பானை வனைந்தார்.

26. பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆறு ஆ) படி

27. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.

அ) ______ சுடும். ஆ) ______ மணம் வீசும்.

28. படிப்போம்; பயன்படுத்துவோம்!

அ). Discipline ஆ). Uniform

29. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) செல்வம் ஆ) இளமைப்பருவம்

30. 'எழுது' என்ற வேர்ச்சொல்லைக் கொண்டு இறந்தகால, நிகழ்கால, எதிர்கால சொற்களை உருவாக்கி எழுதுக.

31. பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் தருக.

அ) தீ ஆ) தா

**ஏ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **2 x 6 = 12**

32. அ) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், வள்ளுவர் கோட்டம் / திருவள்ளுவர் சிலை இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

33. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை கொண்டு 'எங்கள் ஊர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்பு மிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - முடிவுரை)

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com